**தவலம பிரதேச சபை**
**காலி மாவட்டம்**

-----------------------------

## 1. நிதிக் கூற்றுக்கள்

### 1.1 நிதிக் கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

2017 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுகள் 2018 மார்ச் 22 ஆம் திகதி கணக்காய்விற்கு சமர்பிக்கப்பட்டிருந்ததுடன், அந்த நிதிக் கூற்றுக்கள் மீதான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2018 செப்டம்பர் 30 ஆந் திகதி தலைவருக்கு அனுப்பட்டிருந்தது.

### 1.2 முனைப்பழிப்புள்ள அபிப்பிராயம்

இவ்வறிக்கையின் 1.3 பந்தியில் விவரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து தவலம பிரதேச சபையின் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிரயமாகும்.

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு முற்பணக் கணக்கின் மீதி ரூபா 33,770 தொகை மிகையாக காட்டப்பட்டிருந்தது.

(ஆ) பெற வேண்டிய மூலதன உதவி ரூபா 1,400,000 தொகை மற்றும் தவலம ஆயுர்வேத நிலையத்தினை அபிவிருத்தி செய்யும் நிர்மாண வேலையில் கடன்பட்டோர் ஏற்பாடுகள் ரூபா 47,622 தொகை மிகையாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

(இ) பிரதேச சபையின் புதிய கட்டிடத்திற்கு மின் தொடர்பை பெற்றுக்கொள்வதற்காக மேற்கொள்வதற்காக ரூபா 38,653 தொகை மற்றும் 06 எரிவாயு சிலிண்டர்கள் கொள்வனவு செய்வதற்காக ரூபா 18,000 தொகையினை மூலதனப்படுத்தியிருக்கவில்லை.

(ஈ) முன்னைய ஆண்டிற்கான ரூபா 55,000 தொகையான அளவைக் கட்டணம் மீளாய்வாண்டிற்கான செலவு ஒன்று என கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

(உ) மீளாய்வாண்டின் போது ஏல விற்பனை செய்யப்பட்ட கப் வண்டியின் கிரயம் ரூபா 625,000 தொகை மோட்டார் வாகனங்கள் மற்றும் வண்டிகள் கணக்கில் இருந்து அகற்றப்பட்டிருக்கவில்லை.

(ஊ) மீளாய்வாண்டிற்கான மூலதன செலவுகள் ரூபா 2,000,000 தொகையினால் குறைவாகக் காட்டப்பட்டிருந்தது.

#### 1.3.2 இணக்கஞ் செய்யப்படாத கணக்கீடுகள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(i) நிதிக்கூற்றுகளில் காட்டப்பட்டுள்ள கூட்டுத்தொகை ரூபா 14,232,468 தொகைக்கான 06 கணக்கீடு விடயங்கள் தொடர்பான மீதிகள் மற்றும் அதனோடு தொடர்புடைய

துணைப்பதிவேடுகள்/ பதிடேுகளில் காட்டப்பட்டுள்ள மீதிகளிடையே கூட்டுத்தொகை ரூபா 6,783,736 இற்கான சமமின்மைகள் காணப்பட்டதென அவதானிக்கப்பட்டன.

(ii) நிலையான சொத்துக் கணக்குகளின் கூட்டுப் பெறுமதி மற்றும் மூலதன செலவினத்திற்கான அரசிறை உதவுத்தொகை கணக்கின் மீதிகளிடையே ரூபா 765,691 இற்கான வித்தியாசம் ஒன்று அவதானிக்கப்பட்டது.

### 1.3.3 தொங்கல் கணக்கு

5 வருடங்களை விட மிகையான காலம் முதல் முன் கொண்டுவந்து காணப்படும் ரூபா 16,478 இற்கான தொங்கல் கணக்கின் வரவு மீதியை இணங்கண்டு சீராக்கல் மேற்கொண்டு கணக்குகளை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்காமல் அந்த நிலுவை மீதிகளை நடைமுறை பொறுப்புக்களில் இருந்து குறைத்துக் காட்டப்பட்டிருந்தது.

### 1.3.4 பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

**(அ) பெற வேண்டிய கணக்குகள்**

மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதி உள்ளவாறு கடன்பட்டோர் மீதியில் காணப்பட்ட 2 வருடங்கள் முதல் 15 வருடங்கள் வரை கால வீச்சினை மிகைத்துள்ள கூட்டுத்தொகை ரூபா 2,979,248 தொகைக்கான 05 மீதிகளை அறவீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

**(ஆ) செலுத்த வேண்டிய கணக்குகள்**

மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதி உள்ளவாறு கடன்கொடுத்தோர் மீதியில் 1 வருடம் முதல் 4 வருடங்கள் வரையான கூட்டுத்தொகை ரூபா 194,729 இற்கான 03 மீதிகளை தீர்ப்பதற்கு நடடிக்கை எடுத்திருக்கவில்லை.

### 1.3.5 கணக்ககாய்விற்கான எழுத்துமூல சான்றுகள் இன்மை

**தகவல்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்காமை**

தேவையான தகவல்கள் சமர்பிக்கப்பட்டமையால் கூட்டுத்தொகை ரூபா 43,549,185 தொகைக்கான 10 கணக்கு விடயங்களை கணக்காய்வின் போது திருப்திகரமாக மெய்மையாய்தல் செய்வதற்கு முடியாதிருந்தது.

### 1.3.6 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணக்கமின்மை

சட்டங்கள் விதிகள் பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணக்கமின்மைச் சந்தர்ப்ங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங் களுடன் தொடர்பு | பெறுமதி | இணக்கமின்மை |
|---|---|---|
| | ரூபா | |
| **(அ) 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைச் சட்டம்** | | |
| பிரிவு 134 | - | அதிகாரப் பிரதேசத்திலுள்ள முன்னேற் றப்பட்ட பிரதேசங்களை இனங்கண்டு உள்ளூராட்சி ஆணையாளரின் அங்கீகாரத்துடன் வீதவரி அறவீடு செய்தல் தொடர்பாக கவனம் செலுத்தியிருக்கவில்லை. |
| **(ஆ) இலங்கை சனநாயகக் சோசலிச குடியரசின் நிதிப் பிரமாணக் கோவை** | | |
| (i) நிதிப் பிரமாணம் 371(2)(ஆ) | 29,403 | பல வருட காலமாக காணப்படும் முற்பணங்களை 2018 ஜுன் வரை தீர்த்திருக்கவில்லை. |
| (ii) நிதிப் பிரமாணம் 570 மற்றும் 571(1)(2) | 794,786 | 16 வைப்பு மீதிகள் தொடர்பாக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. |
| (இ) 2016 திசெம்பர் 29 திகதிய 30/2016 ஆம் இலக்க பொது நிர்வாக சுற்றறிக்கை | | சபைக்கு சொந்தமான 09 வாகனங்களின் எரிபொருள் எரிதல் தொடர்பாக பரிசோதிக்கப்படவில்லை. |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சுமர்பிக்கப்பட்டிருந்த நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் 2017 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டின் போது மீண்டுவரும் வருமானத்தை விஞ்சிய செலவு ரூபா 529,386 தொகை ஆக காணப்பட்டதுடன், அதற்கு நேரொப்ப முன்னைய ஆண்டின் மீண்டுவரும் வருமானத்தை விஞ்சிய செலவு ரூபா 1,126,512 தொகையாக காணப்பட்டது.

### 2.2 வருமான நிருவாகம்

#### 2.2.1 மதிப்பீட்டு வருமானம் சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்காக சமர்பித்திருந்த மதிப்பீட்டு வருமானம், சிட்டை இடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கிழே காண்பிக்கப்படுகின்றன.

2017 2016

| வருமான மூலம் | மதிப்பீட்டு வருமனம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப் பட்ட வருமானம் | திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மொத்த நிலுவை | மதிப்பீட்டு வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப் பட்ட வருமானம் | திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மொத்த நிலுவை |
|---|---|---|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| (i) வீதவரி மற்றும் வரி | 363,236 | 281,096 | 320,295 | 430,230 | 258,000 | 177,516 | 350,178 | 469,429 |
| (ii) வாடகை | 81,000 | 87,000 | 63,575 | 64,975 | 81,000 | 87,000 | 77,325 | 41,550 |
| (iii) அனுமதிப் பத்திரக் கட்டணம் | 122,000 | 122,000 | 25,000 | 101,000 | 40,000 | 40,000 | 36,000 | 4,000 |
| (iv) ஏனைய வருமானங்கள் | 1,350,000 | - | 1,702,109 | - | 1,254,000 | - | 1,249,384 | - |
| | 1,916,236 | 490,096 | 2,110,979 | 596,205 | 1,633,000 | 304,516 | 1,712,887 | 514,979 |

### 2.2.2 வருமானம் சேகரித்தலின் செயலாற்றுகை

மீளாய்வாண்டிற்கான மதிப்பீட்டு வருமானம் ரூபா 1,916,236 தொகை காணப்பட்டதுடன் சிட்டையிடப்பட்ட வருமானம் ரூபா 490,096 தொகையாகும். ரூபா 514,979 தொகையான ஆரம்ப நிலுவையுடன் அறவிடப்பட வேண்டிய மொத்த சிட்டையிடப்பட்ட வருமானம் ரூபா 1,005,075 தொகையாகும். சிட்டையிடப்பட்ட வருமானத்தில் சேகரிக்கப்பட்ட மொத்த வருமானம் ரூபா 408,870 தொகையாக காணப்பட்டமையினால் வருட இறுதியில் உள்ளவாறு மொத்த நிலுவை ரூபா 596,205 தொகையாகும்.

### 2.2.3 வீதவரியும் வரியும்

**(அ) ஏக்கர் வரி**

ஆரம்ப நிலுவை ரூபா 55,469 தொகையாக காணப்பட்டதுடன், ரூபா 7,296 தொகைக்கான ஆண்டிற்காக சிட்டையிடலுடன் ரூபா 62,765 தொகை அறவிடப்பட வேண்டிக் காணப்பட்ட மொத்த அறவீடு ரூபா 2,459 தொகையாகக் காணப்பட்டமையால் வருட இறுதியில் உள்ளவாறு ரூபா 60,306 இற்கான நிலுவை மீதி ஒன்று காணப்பட்டது.

**(ஆ) வீத வரி**

ஆரம்ப நிலுவை மீதி ரூபா 413,960 தொகையாகக் காணப்பட்டதுடன் ரூபா 273,800 தொகைக்கான ஆண்டிற்கான சிட்டையிடல் உடன் ரூபா 687,760 தொகை அறவிடப்பட வேண்டிக் காணப்பட்டது. மொத்த அறவீடுகள் ரூபா 305,700 தொகையாகக் காணப்பட்டமையால் வருட இறுதியில் உள்ளவாறு ரூபா 382,060 இற்கான நிலுவை மீதியொன்று காணப்பட்டது.

### 2.2.4 நீதி மன்றத் தண்டப் பணம்

மாகாண சபையின் பிரதான செயலாளரிடம் மற்றும் ஏனைய அதிகாரிகளிடம் 2017 திசெம்பர் 31 திகதி உள்ளவாறு நீதி மன்றத் தண்டப்பணம் ரூபா 1,499,408 தொகை மற்றும் முத்திரைக் கட்டணம் ரூபா 2,101,891 தொகை கிடைக்க வேண்டியிருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றுகை

பிரதேசசபை சட்டத்தின் 3 ஆம் பிரிவின் பிரகாரம் மக்கள் சுகாதாரம், பொது பயன்பாட்டு சேவைகள் மற்றும் பொது பெருந்தெருக்கல் தொடர்பாக விடயங்களை முறைப்படுத்துதல் மற்றும் நிர்வகித்தல், பொது மக்களின் சுகபோக வாழ்வு, வசதிகள் மற்றும் நலன்புரி போன்ற சபையினால் நிறைவேற்றப்பட வேண்டியிருந்த கடமைகளை நிறைவேற்றுதல் தொடர்பாக கண்டறியப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

**(அ) செயல் நடவடிக்கை திட்டம்**

ஆக்கப்பட்டுள்ள துணை விதிகளின் பிரகாரம் சபையினால் நிறைவேற்றப்பட வேண்டிக் காணப்பட்ட செயல்பணிகள் தொடர்பாக வருடாந்த செயல் நடவடிக்கை திட்டமொன்று தயாரித்திருக்கவில்லை.

**(ஆ) எதிர்பார்க்கப்பட்ட பெறுபேறு பெற்றுக் கொள்ளாமை**

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

**(i) ஒபாத வாராந்த சந்தைக்காக நீர் வசதிகள் வழங்குகள்**

மாகாண அபிவிருத்தி மானியங்களின் கீழ் ரூபா 134,117 தொகை செலவிடப்பட்டு பூர்த்தி செய்யப்பட்டிருந்த போதிலும், 2018 ஜூலை 20 திகதி அளவில் முற்றாக நீர் வழங்கல் துண்டிக்கப்பட்டிருந்ததுடன், 02 செலவு விடயங்கைள நிறைவேற்றி இருக்காத போதிலும் ரூபா 27,058 தொகை செலுத்தப்பட்டிருந்தது.

**(ii) ஒபாத உப அலுவலகத்திற்கு நீர் வழங்கள் பெற்றுக் கொடுத்தல்**

இந்த செயற்திட்டதிற்காக ரூபா 118,698 தொகை செலவிடப்பட்டிருந்த போதிலும், 2018 ஜூலை 20 திகதி வரை நீர் பம்பு பொருத்தியிருக்காதுடன், அலுவலகத்திற்காக நீர் வழங்கல் வழங்கிகயிருக்கவில்லை. 03 வேலை விடயங்கள் நிறைவேற்றப்பட்டிருக்காத போதிலும் ரூபா 33,837 தொகை செலுத்தப்பட்டிருந்தது.

**(இ) திண்ம கழிவுப் பொருள் முகாமைத்துவம்**

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(i) சபைக்கு தெளிவான உரிமையொன்று இன்றிய காணி ஒன்றில் 3 வருடங்களுக்கு முன்னர் ரூபா 1,683,125 தொகை செலவிடப்பட்டு திண்மக் கழிவுப் பொருள் முகாமைத்துவ நிலையத்திற்காக கட்டிடங்கள் நிர்மாணிக்கப்பட்டிருந்ததுடன், மீளாய்வாண்டு அளவில் அந்த செயற்திட்டம் கைவிடப்பட்டிருந்தது.

(ii) 2017 ஏப்ரல் 20 திகதியில் 2015/13 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தலின் மூலம் குப்பைகளை அப்புறப்படுத்தல், சேகரித்தல், போக்குவரத்து என்பன கட்டாய சேவையொன்று ஆக்கப்பட்டிருந்ததுடன், அதற்காக தனியான அலகு ஒன்று நிறுவப்பட்டு நீண்டகாலத்திட்டமென்று தயாரிக்கப்பட வேண்டுமென

சுட்டிக் காட்டியிருந்த போதிலும் அவ்வாறான வேலைத் திட்டமொன்றிற்கு சபை அடியெடுத்து வைத்திருக்கவில்லை.

**(ஈ) சுற்றாடல் சிக்கல்கள்**

சபையின் அதிகாரப் பிரதேசத்தில் குப்பைகள் சேகரித்தல் ஒன்று மேற்கொள்ளப்பட்டிருக்காததுடன், அதிகார பிரதேசத்தில் குப்பைகள் முறையற்ற விதமான போடப்படுவதினால் கொசுக்கள், ஈக்கல் செரிவு அதிகரித்திருந்ததென அவதானிக்கப்பட்டது.

**(உ) நிலைபேறான அபிவிருத்தி இலக்கு**

நிலைபேறான அபிவிருத்திக்கான 2030 நிகழ்ச்சி நிரலில் நிலைபேறான அபிவிருத்தி குறிக்கோள்கள் மற்றும் இலக்காகிய உலகலாவிய சுட்டிகளின் மூலம் சபை அதிகார பிரதேசத்தில் பொது மக்களின் வாழ்க்கை நிலைமை மற்றும் சுகாதாரத்தை மேம்படுத்துவதற்காக நீண்டகால திட்டங்கள் சபை தயாரித்திருக்கவில்லை.

**3.2 மனித வள முகாமைத்துவம்**

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) 2017 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு முறையே இரண்டாம் மற்றும் ஆரம்ப வகுப்புக்களில் வெற்றிடங்கள் முறையே 02 மற்றும் 08 காணப்பட்டதுடன், அவற்றை நிரப்புவதற்கு மற்றும் 04 மிகை ஊழியர்களை முறைப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(ஆ) 1988 இன் பிரதேச சபை ( நிதி மற்றும் நிருவாக) விதி 180 இன் கீழ் பணம் அல்லது கலஞ்சியப்படுத்துவதற்கு பொறுப்பாக செயற்படும் உத்தியோகத்தர்கள் மற்றும் வருமானம் சேகரிக்கும் அலுவல்களில் ஈடுபடும் உத்தியோகத்தர்களிடம் பிணைகள் பெற்றிருக்கவில்லை.

(இ) சபையில் கடமையாற்றி இறந்துள்ள, ஓய்வுபெற்றுள்ள, வேறு நிறுவனங்களுக்கு இடமாற்றம் பெற்றுச் சென்றுள்ள மற்றும் சேவையை விட்டுச் சென்றுள்ள 14 ஊழியர்களிடம் கூட்டுத்தொகை ரூபா 122,388 இற்காக நிலுவை பதவியணி கடன் மீதியொன்று அறவிடப்படாமல் காணப்பட்டது.

**3.3 செயற்பாட்டுத் திறமையின்மை**

தபபா/பபாகொ/2010/01 இலக்கம் கொண்ட 2010 திசெம்பர் 27 திகதி தென்மாகண உள்ளுராட்சி ஆணையாளரின் சுற்றறிக்கையின் பிரகாரம் மூன்று வருடங்களுக்கு ஒருமுறை வாடகை உடன்படிக்கைகள் நாளதுவரை ஆக்கப்பட வேண்மெனினும், தவலம பொது வர்த்தக கட்டிடத்திற்காக வாடகை உடன்படிக்கைகளை நாளதுவரை ஆக்கப்பட்டிருனக்கவில்லை.

**3.4 சொத்துக்ககள் முகாமைத்துவம்**

**3.4.1 உரித்தாக்கப்படாத சொத்துக்கள்**

07 வாகனங்கள் சபைக்கு கிடைத்து மூன்று வருடங்களை கடந்திருந்த போதிலும் அந்த சொத்துக்களை உரித்தாக்குவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை..

## 3.5 பெறுகை

### 3.5.1 ஒப்பந்த நிருவாகம்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) ஆயுர்வேத கட்டிடத்தின் சிவிலினில் ஒருபகுதியை இறக்குமதி செய்யப்பட்ட பலகைகளைப் பயன்படுத்தி திருத்துவதற்காக ரூபா 161,121 தொகை மற்றும் இறக்குமதி செய்யப்பட்ட பலகைகளுக்கு மரப் பாதுகாப்புத் திரவங்கள் இரண்டு முறை பூசப்பட்டு, எஸ்பஸ்டோஸ் தகடுகளை வெய்வதற்காக ரூபா 206,602 தொகை செலுத்தப்பட்டிருந்தது. சிவிலினுக்காக இறக்குமதி செய்யப்படாத உள்நாட்டு பலகைகள் பயன்படுத்தப்பட்டிருந்தது.

(ஆ) தவலம நூலக அபிவிருத்தி செயற்திட்டத்திற்காக உரிய மதிப்பீட்டில் 02 வேலை விடயங்களுக்காக ரூபா 11,635 தொகை மிகையாக செலுத்தப்பட்டிருந்தது.

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு

மீளாய்வாண்டிற்காக பாதீட்டு மற்றும் உள்ளவாறான வருமானம் மற்றும் செலவுகளுக்கு இடையே கீழ் விவரிக்கப்பட்டுள்ளவாறு கணிசமான முரண்கள் அவதானிக்கப்பட்ட மையால் பாதீடு ஆக்கபூர்வமான நிதி முகாமைத்துவ கட்டுப்பாட்டு கருவி ஒன்றாக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை என அவதானிக்கப்பட்டது.

(அ) 05 செலவு விடயங்களில் ரூபா 10,431,294 தொகைக்கான சேமிப்பு காணப்பட்டதுடன், அந்த பெறுமதி 19 சதவீதம் முதல் 71 சதவீதம் வரை வீச்சு ஒன்றில் காணப்பட்டது.

(ஆ) ஒரு செலவு விடயத்தில் பிரதிகூலமான முரண் ரூபா 633,382 தொகையாக காணப்படுவதுடன், அப்பெறுமதி 227 சதவீதமாகும்.

(இ) 06 வருமான விடயங்களில் பிரதிகூலமான முரண்களின் கூட்டுத்தொகை ரூபா 19,917,678 தொகையாக காணப்பட்டதுடன், அப்பெறுமதி 8 சதவீதம் முதல் 61 சதவீதம் வரை வீச்சில் காணப்பட்டது.

### 4.2 உள்ளகக் கணக்காய்வு

தேன் மாகாண உள்ளூராட்சி ஆணையாளரின் 2014 பெப்ரவரி 24 திகதிய த.ப.பா/யஹ/01/ ந.ச.லே இலக்கம் கொண்ட சுற்றறிக்கை பிரகாரம் போதியளவு உள்ளகக் கணக்காய்வு ஒன்று மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

## 5. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட குறைபாடுகள் அவ்வப்போது சபையின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டிருந்ததுடன் பின்வரும் கட்டுபாட்டு பரப்புகள் தொடர்பாக விஷேட கவனம் செலுத்தப்பட வேண்டும்.

| | முறைமை | | குறைபாடு |
|---|---|---|---|
| | ------------------------- | | ------------------------- |
| (அ) | கணக்கீடு | (i) | முன்னைய ஆண்டுகள் முதல் கொண்டு வந்து காணப்படும் கணக்கு மீதிகளை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுத்திருக்காமை. |
| | | (ii) | கணக்குகள் மற்றும் அவற்றுடன் தொடர்புடைய அட்டவணைக்கான இடையே, காணப்படும் வித்தியாசங்கள் சரிசெய்திருக்காமை. |
| (ஆ) | நிலையான சொத்துக்கள் | (i) | நிலையான சொத்துக்கள் பதிவேடு முறைப்படி பேணப்பட்டிருக்காமை. |
| | | (ii) | காணிகளின் உரிமையை இனங்காணப்பட்டி ருக்காமை |
| (இ) | வாகனக் கட்டுப்பாடு | (i) | வாகனங்களின் எரிபொருள் பரிசோதனை செய்வதற்கு நடவடிக்கை எடுக்காமை. |
| | | (ii) | வாகனங்களின் உரிமையை உரித்தாக்கியிரு க்காமை. |
| (ஈ) | வருமானம் சேகரித்தல் | (i) | நிலுவை வருமானத்தை அறவீடு செய்வதற்கு முறையான வேலைத்திட்டமொன்று செயற்படுத்தியிருக்காமை. |
| | | (ii) | கடைகளின் வாடகை உடன்படிக்கை நாளதுவரை ஆக்கியிருக்காமை. |
| (உ) | பதவியணி முகாமைத்துவம் | (i) | பதவியணிகளை முறைப்படுத்தியிருக்காமை. |
| | | (ii) | நிலுவை கடன் மீதிகள் அறவீடு செய்திருக்காமை. |